රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | HD/H/COMMON/2023 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2024.01.05 |

செயலாளர்

நிதி அமைச்சு, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

**<u>கொழும்பு 05, கெப்பெட்டிபொல மாவத்தை, மாநாட்டு வீடமைப்புத் தொகுதியின் தற்போதைய நிலை அறிக்கை சார்பானது</u>.**

கொழும்பு 05, மாநாட்டு வீடமைப்புத் தொகுதி தொடர்பான பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து 09.03.2023 வழங்கப்பட்டுள்ள நிலைமை அறிக்கையின்படி, பொதுவாக மேற்படி இல்லங்களில் பின்வரும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

1. பல இல்லங்களில் படிக்கட்டுகளை பழுதுபார்த்தல் (இடித்து மீண்டும் கட்டுதல்)
2. பென்ட்ரி சுவர்கள் சேதமடைந்திருப்பதாகவும்
3. வீடுகளின் மழைப் பீலிகள், மற்றும் மேற்கூரைகள் சிதைந்து உடைந்துள்ளதாகவும், மேற்கூரைகளில் உத்திரம் வைக்கப்பட்டுள்ள சுவர்களில் விரிசல் ஏற்பட்டு அருகில் உள்ள கான்கிரீட் மேற்கூரைகள் உடைந்து சேதம் அடைந்துள்ளதாகவும்.
4. பெரும்பாலான வீடுகளில் உள்ள குளியலறைகள் பழுதுபார்க்கப்பட வேண்டும் , நீர்க்குழாய்கள் உடைந்து தண்ணீர் கசிவு காரணமாக சுவர்கள் சேதமடைந்துள்ளதாகவும்.
5. வீடுகளின் கதவுகளும் ஜன்னல்களும் உடைந்து சிதைந்துள்ளதாகவும்,
6. கான்கிரீட் ஸ்லாப்களில் ஆங்காங்கே உடைந்து கம்பிகள் வெளியேறியுள்ளதாகவும் தண்ணீர் கசிவினால் சிதைவடைந்துள்ளதாகவும் கான்கிரீட் தூண்களை சீரமைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, அரச அலுவலர்கள் வசிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்த வீடமைப்புத்தொகுதியில் நிலவும் மேற்கண்ட பழுதுபார்ப்புக்கள் குறித்து விஷேட கவனம் செலுத்த வேண்யுள்ளது. கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் சமர்பிக்கப்பட்டுள்ள


දුරකථන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: information@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம்: www.pubad.gov.lk

அறிக்கையின்படி, இந்த இல்லங்களில் வசிப்பது ஆபத்தானது என்றும், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்பாராத அனர்த்தமேதும் ஏற்பட்டால், உயிர் மற்றும் பொருள் சேதம் ஏற்பட அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

03. மேற்படி அறிக்கையின்படி இந்தச் சீர்திருத்தப் பணிகள் அனைத்தும் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் இந்த இல்லங்களை அகற்றி வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு, இரண்டு தசாப்தங்களாக நிலவி வரும் முயற்சிகளால் முறையான திருத்தப்பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

04. எனவே, மிகவும் விரைவாக ஒரு புதிய வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவுகளுக்கான விண்ணப்பம் (RFP) தனியார் பங்காளித்துவ முறையில் மேற்கொள்ளல் காத்திற்கேற்றதெனவும், அதனை விரைவாக மேற்கொள்வது அவசியமாகும் எனவும் அவதானிக்கிறேன்.

05. மேலும், இந்த வீடமைப்புத் தொகுதியின் தற்போதைய நிலை குறித்து உங்கள் கவனத்தை ஈர்ப்பதோடு, உங்கள் தகவலுக்காக, கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரதிகளை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

ஒப்பம்./ பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி இலக்கம் : 011-2695738
மின்னஞ்சல்: pubab.secretary@sltnet.lk

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 1. | ஜனாதிபதியின் செயலாளர்<br>ஜனாதிபதி அலுவலகம் | தகவல்களுக்காக |
| 2. | சிரேஷ்ட உதவிச் செயலாளர்<br>தகவலுக்கு மற்றும் தொழில்நுட்ப | மாநாட்டு வீடமைப்புத் தொகுதியில் பிரிவு<br>இணையதளத்தில் பதிவிட வசிப்பவர்களின் |